**கலவான பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 20 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கலவான பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளிற்குரிய முத்திரைக் கட்டணம் குறை பில்லிடல் ரூபா 14,328,326 இற்காக சீராக்கம் செய்திருக்கதாததுடன், அது தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 25,343,536 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளிற்குரிய முத்திரைக் கட்டணம் குறை பில்லிடலிற்காக சீராக்கம் செய்ய வேண்டும். | 2020 வருட இறுதிக் கணக்கு கூற்று தயாரிக்கையில் சரி செய்கிறேன். |
| (ஆ) | மாகாண சபை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பெறவேண்டிய ரூபா 6,898,694 மற்றும் செலுத்த வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 3,930,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுக்குரிய அட்டுறு மூலதன வருமானம் மற்றும் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக செயற்பட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான கூட்டுத் தொகை ரூபா 1,849,290 ஆன மூலதன செலவு செயற்பாட்டு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்பாட்டு செலவு மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியிலும் வாடகைக்கு வழங்கப்படாத 33 கடையறைகளிற்காக ரூபா 1,038,000 ஆன வருமானம் பில்லிடப்பட்டிருந்தது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டுகளிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் குறை பில்லிடல் ரூபா 263,084 இற்காக சீராக்கம் செய்திருக்கதாததுடன், கிடைத்திருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,190,125 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் குறை பில்லிடலிற்காக சீராக்கம் செய்ய வேண்டும். | நீதிமன்ற தண்டப்பண கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவு ரூபா 84,231 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டர் படகின் பெறுமதி ரூபா 73,305 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 வருட நிதிக்கூற்று தயாரிக்கையில் சரி செய்யப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலக புத்தகங்கள் ரூபா 58,300 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 வருட நிதிக்கூற்று தயாரிக்கையில் சரி செய்யப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஒ) | 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 34,061,916 வித்தியாசம் ஆனது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமதிகள் உபயோகப் பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஓ) | கூட்டுத்தொகை ரூபா 258,361 ஆன 02 கணக்கு விடயங்களிற்கான போதிய சான்றுகள் கணக்காயவிற்கு சமர்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமரிபிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான கூட்டுத் தொகை ரூபா 12,893,776 ஆன பொது வைப்புகள் தொடர்பாக நடடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த காலப் பகுதிக்குரிய பதிவேடுகளை பரீட்சித்து சரியாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் எரி பொருள் பாவனை பரிசோதனை செய்யப்பட வேண்டும். | பழுதுபார்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு உடனடியாக எரி பொருள் பரிசோதனைக்கு அனுப்புவதாக அறிவிக்கிறேன். |
| (இ) 2018 ஜுலை 19 ஆம் திகதி 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்களிற்கு இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சேவை பெறுனர்களிற்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை வழங்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் இச் சேவையை விரிவாக்க தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுவதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 38,918,876 ஆனதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 260 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,514,000 | 3,346,428 | 3,495,201 | 3,712,885 | 3,385,155 | 3,257,175 | 3,523,564 | 3,187,549 |
| (ii) | வாடகை | 7,779,700 | 5,827,127 | 4,702,597 | 6,256,572 | 3,200,250 | 5,299,846 | 5,132,945 | 5,108,105 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 601,815 | 554,093 | 555,293 | - | 528,680 | 481,940 | 481,940 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,749,550 | 12,317,621 | 13,326,159 | 23,495,799 | 4,872,300 | 8,848,245 | 13,442,412 | 13,893,730 |
| | | 24,645,065 | 22,045,269 | 22,079,250 | 33,465,256 | 11,986,385 | 17,887,206 | 22,580,861 | 22,189,384 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீத வரி**<br>03 ஆண்டுகளை விஞ்ஞிய காலமாக நிலவி வரும் கூட்டுத்தொகை ரூபா 719,652 ஆன வீதவரி 121 அலகுகளின் நிலுவை அறவிடப்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஆதனங்களை தடைசெய்யும் வேலைத்திட்டத்தின் மூலம் 2019 ஆண்டினுள் ரூபா 286,365 அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | **ஏக்கரி வரி**<br>மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 195,786 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலம் முதல் நிலவிவரும் 191 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டி ரூபா 167,764 உள்ளடங்கியிருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏக்கரி வரி ஒப்பாய்வொன்று செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் முன் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,060,321 ஆனதுடன் முத்திரைக் கட்டணம் ரூபா 4,765,090 ஆனது. | சபையிற்கு அறவிடப்பட வேண்டிய வருமனம் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைய அதிகார எல்லையில் ஒரு மாதத்தில் 110 டொன் அளவு கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்ட போதும், அக் கழிவுப் பொருட்களை முகாமை செய்ய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கழிவுப் பொருள் முகாமை திட்டமொன்றை தயாரித்து நடைமுறைபடுத்த வேண்டும். | சேர்கப்படும் உக்கலடையும் கழிவுகள் நிலத்லத்தில் புதைத்தல் மற்றும் உக்கலடையா கழிவுகள் எறிக்கப்படுகிறது எனவும் அறிவிக்கிறேன். கழிவுப் பொருள் முகாமைக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் கோரியுள்ள ஒதுக்கீடு கிடைத்தவுடன் கழிவுப் பொருள் முகாமை நடவடிக்கையை முறையாக செயற்படுத்த எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குகுளே கங்க அன்மித்து மோடார் படகு சேவையொன்றை ஆரம்பித்தல் மற்றும் இடர் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் நோக்கில் ரூபா 791,730 செலவில் படகொன்று கொள்வனவு செய்யப்பட்ட போதும், படகு சேவையை ஆரம்பித்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். | சுற்றுலா வேலைகளிற்கு பயன்படுத்தும் நோக்கில் மோடார் படகு கொள்வனவு செய்யப்பட்ட போதும், நீர் பாசனத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காததால் கருத்திட்டத்தை செயற்படுத்துதல் தாமதமானதாகவும் எதிர்காலத்தில் இடர் சந்தர்ப்பங்களில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.2.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயலிழந்த நிலையிலுள்ள 02 வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயலிழந்த வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலிழந்த நிலையிலுள்ள கை டெக்டரை மற்றும் பாதை தளர்த்தியை 2019 பண்டக கணிப்பீட்டில் ஏலத்தில் விற்க பரிந்துரைத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2.2 வருடாந்த பண்டக கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டு சபை பரிந்துரைகளை மீளாய்வாண்டு இறுதிவரையும் செயற்படுத்தி இருக்கவில்லை. | பண்டக கணிப்பீட்டு சபை பரிந்துரைகளை உரிய காலத்தில் செயற்படுத்த வேண்டும். | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை பரிந்துரைகளின் பிரகாரம் பழுதடைந்த பண்டங்களின் ஏலவிற்பனை 2020 ஜுலை 01 திகதி மேற்கொள்ளப்பட இருக்கிறது. |

**3.3 பெறுகைகள்**

**3.3.1 வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அபிவிருத்தி செய்ய தெரிவு செய்யப்பட்டிருந்த 05 பாதைகளுக்கு தேவையான ABC கலவையை வழங்குவதற்காக 2018 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் ரூபா 827,650 செலவிடப்பட்டிருந்தது. அங்கு பெறுகைகள் நடைமுறைக்கு முரணாக பண்டங்களை பெற்றிருந்ததுடன், பெறுகைகள் நடைமுறையை பின்பற்றியதா காட்டுவதற்கு போலியான ஆவனங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளல் பெறுகைகள் வழிகாட்டிற்கு இணங்க மேற்கொள்ள வேண்டியதுடன், சபை நிதியத்தை செலவிட்டு அபிவிருத்தி கருத்திட்டங்களை செய்யும் போது திட்டமிட்ட அடிப்படையில் மற்றும் வினைத்திறனுடன் நடந்து கொள்ள வேண்டும். | இப் பாதை அதிகளவில் பழுதடைந்து மற்றும் சேற்றுடன் காணப்பட்டதுடன் பாதையை பயன்படுத்தும் பொது மக்களின் எழுத்தமான கோரிக்கையின் காரணமாக மிகத் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடொன்றாக கருதி அதன் போது சபையிடம் காணப்பட்ட நிதியளவினையும் கருத்திற் கொண்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ABC பரப்பும் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது என அறிவிக்கிறேன். |

### 3.3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வேவெல்கந்துர தொடங்வல பாதை அபிவிருத்திக்காக பயன்படுத்த 2019 செப்தம்பர் 25 திகதி 19 பீப்பாக்கள் விநியோகிக்கப்பட்ட போதும், 2020 ஜுன் மாதம் இறுதி வரையும் குறித்த பாதை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்காததுடன், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டையேனும் கணக்காய்விற்கு சமர்பிக்க சபைக்கு இயலாதிருந்தது. | வேலைக்காக பண்டங்களை விநியாகித்தல் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய வேலை செய்யப்படும் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது நிலவும் மழை காரணமாக தார் இடும் வேலையை மேற்கொள்வது கடினமாகையால் தார் பரப்பு வேலை மேற்கொள்ளும் வரை தார் பீப்பாக்களில் பொறுப்பை கிராம சங்கத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கிறேன். |